ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ...



திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்...

1. அழைத்து வருகிறேன் என்றேனோ அக்ரூரைப் போலே...

2. அகமொழித்து விட்டேனோ விதுரரைப் போலே...

3. தேகத்தை விட்டேனோ ரிஷி பத்தினியைப் போலே...

4. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப் போலே...

5. பிணமெழுப்பி விட்டேனோ தொண்டைமானைப் போலே...

6. பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப் போலே...

7. தாய்க் கோலம் செய்தேனோ அனஸூயையைப் போலே...

8. தந்தை எங்கே என்றேனோ துருவனைப் போலே...

9. மூன்றெழுத்து சொன்னேனோ க்ஷத்திரபந்துவை போலே...

10. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப் போலே...

11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே...

12. எம்பிரான் என்றேனோ பட்டர் பிரானைப் போலே...

13. ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் ( திருமழிசை ஆழ்வார்) போலே...

14. அவன் (நான்)/சிறியன் என்றேனோ ஆழ்வாரைப் போலே...

15. எதேனும் என்றேனோ குலசேகரரைப் போலே...

16. யான் சத்தியம் என்றேனோ க்ருஷ்ணனைப் போலே...

17. அடையாளம் சொன்னேனோ கபந்தனை போலே...

18. அந்தரங்கம் சொன்னேனோ திரிஜடையைப் போலே...

19. அவன் தெய்வம் என்றேனோ மண்டோதரியைப் போலே...

20. அஹம் வேத்மி என்றேனோ விஸ்வாமித்திரரைப் போலே...

21. தேவு மற்றறியேனோ மதுரகவியாரைப் போலே...

22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியைப் போலே...

23. ஆழி மறை என்றேனோ வசுதேவரைப் போலே...

24. ஆயனாய் (ஆயனை) வளர்த்தேனோ யசோதையைப் போலே...

25. அனுயாத்திரை செய்தேனோ அணிலங்களைப் போலே...

26. அவல் பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே...

27. ஆயுதங்கள் ஈந்தேனோ அகஸ்தியரைப் போலே...

28. அந்தரங்கம் புக்கேனோ சஞ்சயனைப் போலே...

29. கர்மத்தால் பெற்றேனோ ஜனகரைப் போலே...

30. கடித்து அவனை கண்டேனோ திருமங்கையாரைப் போலே...

31. குடை முதலானது ஆனேனோ அனந்தாழ்வானைப் போலே...

32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப் போலே...

33. இளைப்பு விடாய் தீர்த்தேனோ நம்பாடுவான் போலே...

34. இடைக்கழியில் கண்டேனோ முதலாழ்வார்களைப் போலே...

35. இரு மன்னரை பெற்றேனோ வால்மீகரைப் போலே...

36. இரு மாலை ஈந்தேனோ தொண்டரடிப்பொடியாழ்வார் போலே...

37. அவன் உரைக்கப் பெற்றேனோ திருக்கச்சியாரைப் போலே...

38. அவன் மேனி ஆனேனோ திருப்பாணரைப் போலே...

39. அனுப்பி வையும் என்றேனோ வசிஷ்டரை போலே....

40. அடி வாங்கினேனோ கொங்கில் பிராட்டியைப் போலே...

41. மண் பூவை இட்டேனோ குரவ நம்பியை போலே...

42. மூலமென்று அழைத்தேனோ கஜராஜனைப் போலே...

43.பூசக் கொடுத்தேனோ கூனியைப் போலே....

44. பூவைக் கொடுத்தேனோ மாலாகாரரைப் போலே....

45. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே...

46. வைத்தவிடத்து இருந்தேனோ பரதனைப் போலே...

47. அக்கரைக்கே விட்டேனோ குஹப்பெருமாளைப் போலே...

48. அரக்கனுடன் பொருதேனோ பெரியவுடையாரைப் போலே...

49. இக்கரைக்கே சென்றேனோ விபீஷணனைப் போலே....

50. இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே...

51. இங்கும் உண்டென்றேனோ ப்ரஹ்லாதனைப் போலே...

52. இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப் போலே...

53. காட்டுக்குப் போனேனோ பெருமாளைப் போலே....

54. கண்டு வந்தேன் என்றேனோ திருவடியைப் போலே...

55. இரு கையும் விட்டேனோ த்ரௌபதியை போலே...

56. இங்கு பால் பொங்குமென்றேனோ வடுக நம்பியைப் போலே...

57. இரு மிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப் போலே...

58. நில்லெனப் பெற்றேனோ இடையாற்றூர் நம்பியைப் போலே...

59. நெடுந்தூரம் போனேனோ நாதமுனிகளைப் போலே...

60. அவன் போனான் என்றேனோ மாருதியாண்டானைப் போலே...

61. அவன் வேண்டாம் என்றேனோ ஆழ்வானைப் போலே...

62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானாரைப் போலே...

63. அருளாழம் (அருளாழி) கண்டேனோ நல்லானைப் போலே...

64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே...

65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வாரி ஆண்டானைப் போலே...

66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே...

67. அனுகூலம் சொன்னேனோ மால்யவானைப் போலே...

68. கள்வன் இவன் என்றேனோ லோக குருவைப் போலே...

69. கடலோசை என்றேனோ பெரிய நம்பியைப் போலே...

70. சுற்றிக் கிடந்தேனோ திருமாலையாண்டானைப் போலே...

71. சூளுறவு கொண்டேனோ திருக்கோட்டியூராரைப் போலே...

72. உயிராயப் பெற்றேனோ ஊமையைப் போலே...

73. உடம்பை வெறுத்தேனோ திருநறையூராரரைப் போலே...

74. என்னைப் போல் என்றேனோ உபரிசரனைப் போலே...

75. யான் சிறியன் என்றேனோ திருமலை நம்பியைப் போலே...

76. நீரில் குதித்தேனோ கணபுரத்தாளைப் போலே...

77. நீரோருகம் கொண்டேனோ காசி சிங்கனைப் போலே....

78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப் போலே...

79. வாயிற் கையிட்டேனோ எம்பாரைப் போலே...

80. தோள் காட்டி வந்தேனோ பட்டரைப் போலே...

81. துறை வேறு செய்தேனோ பகவரைப் போலே...

www.radhekrishnasatsangam.com
Guruji Gopalavallidasar